# நாணயச் சபை

# இலங்கை மத்திய வங்கி

2021 சனவரி 01 | நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் | 2021இன் 01ஆம் இலக்கம்

---

## அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தம்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பாக 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கு பின்வரும் திருத்தங்களை நாணயச் சபை விடுத்திருக்கிறது.

இதற்கமைய, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 4 மற்றும் பணிப்புரை 6 என்பன பின்வரும் பணிப்புரைகள் மூலம் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

**4 மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள்**

4.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அ. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

**அ.1 இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்:**

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக; அல்லது

ii. தொழில்சார் நிபுணத்துவத்தின் உறுப்பினராகவும் அத்தகைய உறுப்பினர் தரத்தில் 5 ஆண்டு அனுபவத்துடன் கூடியதொருவராகவும் இருத்தல் வேண்டும்.

தொழில்சார் நிபுணத்துவ சங்க உறுப்பினர் தரத்திலிருந்த அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கையினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக 2019ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக (திருத்தச்) சட்டத்தின் 24ஆம் பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

**அ.2 ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் ரோயல் நிறுவகத்தின் பட்டய மதிப்பீட்டு அளவையாளரொருவராக இருத்தல் வேண்டும். அவர்:**

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக (ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் ரோயல் நிறுவகத்தின் உறுப்பினர்); அல்லது

ii. உறுப்புரிமையின் அத்தகைய தரத்தில் 05 ஆண்டு கால அனுபவத்துடன் கூடிய பட்டய அளவீட்டாளர்களின் ரோயல் நிறுவகத்தின் ஏனைய உறுப்பினர்களாக

இருத்தல் வேண்டும்.

ஆ. மேலே பணிப்புரை 4.1(அ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளின்படி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மதிப்பீட்டாளர் குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டாளர்கள் தொடர்பான தொழில்சார் நிபுணத்துவ சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ விதந்துரைக்கப்பட்ட தொழில்சார் அபிவிருத்திகளை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டினை மேற்கொள்கின்ற உள்ளக மதிப்பீட்டாளர்கள் மேலே பணிப்புரை 4.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்களைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

ஈ. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளை மேற்கொள்வதில் உயர்மட்டத்திலுள்ள தொழில்சார் நிபுணத்துவ நடத்தை, ஒழுக்கவியல் மற்றும் நேர்மைத்தன்மை என்பனவற்றைக் கொண்டுள்ளவர்கள் மதிப்பீட்டாளர் குழுவில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.

**6. மதிப்பீடுகளின் கால இடைவெளி**

6.1 அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளது கால இடைவெளி பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

அ. செயற்படாதனவாக விளங்கும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு எந்தவொரு ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கத்திற்குமாக பின்வருமாறான கால இடைவெளியினை கொண்டிருத்தல் வேண்டும்.

i. கடன்பாட்டாளரினால் வதியும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற வதிவிட சொத்திற்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் வசதியைப் பொறுத்தவரை; அறிக்கை ஐந்தாண்டுக்குக் கூடுதலான பழமையானதாக இருக்கக்கூடாது.

ii. மற்றைய அனைத்து கொடுகடன் வசதிகள்: அறிக்கையானது நான்கு ஆண்டுகளுக்குக் கூடுதலான பழமையானதாக இருத்தல்கூடாது.

ஆ. செயற்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகள் கடன் வழங்கப்படுகின்ற ஆரம்ப கட்டத்தின் போதும் அதனைத் தொடர்ந்து கொடுகடன் வசதி அதிகரிக்கப்படுகின்ற ஏதேனும் நேரத்திலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 3.1 (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்களின் மீள்மதிப்பீடானது பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கைகளுக்கு இசைந்த விதத்தில் அல்லது அத்தகைய அசையாச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற ஏதேனும் குறிப்பிடத்தக்க தளம்பல் மாற்றங்களுக்கேற்ப மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும், அத்தகைய இலாபங்கள் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்குகொருமுறை மட்டுமே அடுக்கு 2 மூலதனத்தில் உள்ளடக்கப்படலாம்.

**முன்னைய பணிப்புரைகளை இரத்துச் செய்தல்**

அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தங்கள் மீதான 2019ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

ஒப்பம்

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்